**செய்தி வெளியீடு எண்:194** **நாள்:10.04.2017**

<u>செய்தி வெளியீடு</u>

**<u>தர மேலாண்மை, உற்பத்தி மேம்படுத்துதல் மூலம் பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவு சான்றிதழ் (ZED) பெறுதல் குறித்த விழிப்புணர்வு முகாம்</u>**

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், (தமிழ்நாடு அரசின் தன்னாட்சி நிறுவனம்) சென்னை சிட்கோ தொழிற்பேட்டையில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தொழில் முனைவோரின் வளர்ச்சிக்காக பல்வேறு பயிற்சி திட்டங்களை நடத்தி வருகிறது. குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் புரிபவர்கள் தங்களுடைய உற்பத்திப் பொருட்களின் உலகளாவிய போட்டித்திறனை மேம்படுத்த, தாங்கள் தயாரிக்கும் பொருட்கள் எவ்வித குறைபாடும் இல்லாத வகையில் உற்பத்தி செய்தல் மிக முக்கியமானதாகும். அதுபோன்று தொழிற்சாலைகள் பொருட்கள் உற்பத்தியின் மூலம் எந்தவித சுற்றுசூழல் மற்றும் உடல் நல பக்க விளைவுகளை ஏற்படுத்தாத வண்ணம் பொருட்களை உற்பத்தி செய்வதும் அவசியமானதாகும்.

தொழில் முனைவோர் மேம்பாட்டு நிறுவனம், சென்னை அம்பத்தூரில் உள்ள டி.வி.எஸ; பயிற்சி மற்றும் சேவைகள் நிறுவனத்துடன்(TVS-TS) இணைந்து, தர மேலாண்மை மற்றும் தொழிற்சாலைகளில் பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவு (Zero Defect-Zero Effect ZED) சான்றிதழ் திட்டம் குறித்த ஒரு நாள் கருத்தரங்கம் வரும் 2017, ஏப்ரல் 12ம் தேதி காலை 9:30 மணி முதல் மாலை 5:30 மணி வரை, டி.வி.எஸ; பயிற்சி மற்றும் சேவைகள் நிறுவனம், அம்பத்தூரில் நடைபெற உள்ளது. மேற்படி கருத்தரங்கில் மத்திய அரசின் பூஜ்ஜிய குறைபாடு மற்றும் பூஜ்ஜிய விளைவு (ZED) சான்றிதழ் பெற செயல்படுத்த வேண்டிய வழிமுறைகள் பற்றியும் மற்றும் பொருட்களின் தர மேலாண்மை குறித்தும் பயிற்சி அளிக்கப்படும். தற்போது உற்பத்தியில் இருக்கும் நிறுவனங்கள் நிறுவனத்தின் UAM / EM-II சான்றுடன் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். உற்பத்தியில் இருக்கும் நிறுவனங்களுக்கு இப்பயிற்சி இலவசமாக வழங்கப்படுகிறது.

மேலும் தகவல்களுக்கு திரு. கே.பாலகிருஷ்ணன், பயிற்சி ஒருங்கிணைப்பாளர், EDII-TN (8754514770) அவர்களை அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.(மின்னஞ்சல;: tc3@editn.in). இக்கூட்டத்தில் கலந்துகொள்ள முன்பதிவு அவசியமாகும்.

கூடுதல் தலைமை செயலாளர் / இயக்குனர்

**வெளியீடு : – இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9**